உ

சிவமயம்

# அற்புத தரிசனம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி



தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பியல்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு.

அமரர்

## திருமதி. அற்புதமலர் ஆறுமுகம்

அவர்களின்

# நினைவு மலர்

## 04.03.2001

உ

சிவமயம்

"பெண்ணிற் பெருந்தக்க யாவுன கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்"



அமரர்

# திருமதி. அற்புதமலர் ஆறுமுகம்

அவர்கள்


**தோற்றம்**
**15.09.1932**

**மறைவு**
**31.01.2001**

## திதி

**விக்கிரம தைமாதம் மேவுபூர்வ பக்கத்துச்**
**சத்தமிசேர் அச்சுவினி சார்திதியே - உத்தமியார்**
**சீரற் புதமலர்த் தேவி சிவபாதம்**
**சேரக் கிடைத்த தினம்.**

"பெண்ணினல் லாளொடும்
பெருந்தகை இருந்ததே"



கணவர் அ.ஆறுமுகமும்
துணைவி அற்புதமலரும்

உ
சிவமயம்

# தோத்திரங்கள்
திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.
( திருஞானசம்பந்தர்)

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலுட் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.
(திருநாவுக்கரசர்)

பொன்னும் மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானை
பிழையெல் லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மையன் என்றறி யொண்ணா
எம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
ஆரு ரானை மறக்கலு மாமே.
(சுந்தரமூர்த்தியர்)

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.
(மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிர என் கண்குளிர்ந்தனவே.

(கருவூர்த்தேவர்)

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடி யார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்
காட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருளள வில்லதோர்
ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்று முள்ள
பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

(சேந்தனார்)

## திருப்புராணம்

நன்மைபெரு கருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும் போதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம் என்றவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சேர்த்தினான் சிவபெருமான்.

(சேக்கிழார்)

## திருப்புகழ்

பாதிமதிநதி போதும் அணிசடை நாத னருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகன் பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காகமுறவருள் மாயனதுதிரு மருகோனே
காலன் எனையணு காமலுனதிரு காலில்வழிபட அருள்வாயே
ஆதி யயனொடு தேவர்சுர ருல காளும் வகைதரு சிறைமீளா
ஆடும் மயிலினில் ஏறி அமரர்கள் சூழ வரவரும் இளையோனே
சூதம் மிகவளர் சோலை மருவுசு வாமிமலைதனில் உறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட வேலைவிடவல பெருமாளே.

(அருணகிரிநாதர்)

பாத பங்க யங்க ழல்கள் பரிபு ரங்களைசைவே
பசிய பிஞ்சுத் தொடையு மசையப் பண்டியும் குலுங்கவே
மாத ரிருவர் அணையும் மார்பில் மணிக்க லன்கள் மின்னவே
வரத கரமும் அபய கரமும் மாறி மாறி வீசியே
காதி லொளிரக் குண்ட லங்கள் கண்சி மிட்டி உலகெலாம்
காக்கு மெங்கள் வரத முருகன் வருக வருக வருகவே
சீத விசவத் தனையில் ஐய சிவகு மார வருகவே
செல்வம் வருக வருக எங்கள் சிந்தை குளிர வருகவே.

முத்துப் பற்கள் விளக்கிமலர் முகமும் கழுவ வந்தருள்க
முழுகித் திருநீறணிந்துசடை முடியும் திருத்த வந்தருள்க
சித்தி ரப்பூம் பட்டணிந்து சிறந்த வாசப் பொடிபூசித்
திலகம் தீட்டி யலங்காரம் செய்ய வருக பரிவோடும்
பத்த ருன்னைக் கண்குளிரப் பார்க்க மிகுந்த ஆவலுடன்
பக்கத் தொதுங்கி நிற்கின்றார் பாங்காயவர் மேல அருள்நோக்கம்
வைக்க வருக அருளாளர் வதியும் விசவத் தனை முருகா
வருக வருக உலகமெலாம் வாழ வருகவே வருகவே
(விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ்)

சொல்லரிய அற்புத மலர்ச்செல்வி வந்தருள்க தோகையே வந்தருளுக
தோன்றாத துணையாய் இருந்தெம்மை வாழ்விக்கும் சுந்தரீ வந்தருளுக
கல்லினும் வலியஎன் நெஞ்சினை உருக்கிடும் காந்தமே வந்தருளுக
கடலெனும் பிறவியைக் கடக்கவுறு துணையான கப்பலே வந்தருளுக
வில்லை நிகர் புருவமும் வேலொத்த விழிகளும் விளங்குதிருமுகங்காட்டியாம்
வினைவெயில் ஒழிந்துநின் பதநிழ லிருந்தின்பம் மேவ வந்தருள்க அம்மா
நல்லவர்கள் பழிபாவம் அஞ்சுபவர் அருளாளர் நாளும் துதித்து வேண்ட
நலம்பெறு வழக்கம் பரைத்தலமமர்ந்தருளும் நளினி சிவசக்தியுமையே
( வழக்கம்பரை அம்மன் பதிகம்)

திருச்சிற்றம்பலம்

## நாவலர் பெருமான் அருளிய சைவவினாவிடைகளிலிருந்து எடுக்கப்பட்டவை

திருச்சிற்றம்பலம்

கடவுளியல் (பதி)

01. உலகத்துக்கும் கருத்தா யாவர்? சிவபெருமான்

02. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
எங்கும் நிறைந்தவர், என்றும் உள்ளவர், எல்லாம் வல்லவர், எல்லாம் அறிபவர், நித்தியானந்தர். சுவதந்திரர்.

03. சிவபெருமான் ஆன்மாக்களுக்காகச் செய்யும் தொழில்கள் எவை?
படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன

04. புடைத்தலாவது யாது?
ஆன்மக்களுக்கு தனுகரணபுவன போகங்களை முதற்காரணத்தில் நின்றும் தோற்றுவித்தல்.

05. காத்தலாவது யாது ?
தோற்றுவிக்கப்பட்ட தனுகரன புவனபோகங்களை நிலைபெறச்செய்தல்.

06. அழித்தலாவது யாது?
தனுகரன புவன போகங்களை முதற்காரணத்தில் ஒடுக்குதல்.

07. மறைத்தலாவது யாது ?
ஆன்மாக்களை இருவினைப்பயன்களாகிய போக்கியப் பொருள்களில் அமிழ்த்துதல்.

08. அருளலாவது யாது?
ஆன்மாக்களுக்கு பாசத்தை நீக்கி சிவத்துவத்தை விளக்கல்.

09. தனுகரண புவன போகம் என்பன யாவை?
தனு - உடம்பு, கரணம் - மனம்முதலிய கருவி, புவனம் - உடம்புக்கு ஆதாரமாகிய உலகம், போகம் - அனுபவிக்கும் பொருள்.

10. ஒரு காரியத்துக்குக் காரணம் எத்தனை?
முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்றாம்.

11. தனுகரணபுவன போகம் எனப்படும் பிரபஞ்சமாகிய காரியத்துக்கு முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் எவை?

12. சிவசக்தியாவது யாது?
அக்கினியோடு சூடுபோலச் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமை.

13. சிவபெருமானுக்குரிய வடிவம் எவை?
அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்றுமாம்.

14. சிவபெருமான் இவ்மூவகைத்திருமேனியுடையபோது எவ்வெப் பெயர் பெறுவார்.அருவத்திருமேனியுடைய போது சிவன் எனவும், அருவுருவத் திருமேனி உடையபோது சதாசிவன் எனவும், உருவத்திருமேனி உடைய போது மகேசன் எனவும் பெயர் பெறுவார்.

15. சிவபெருமானுடைய உருவம் ஆன்மாக்களாகிய நம்போலிகளுடைய உருவம் போன்றதா.?
ஆன்மாக்களுடைய உருவம் இருவினைக்கு ஈடாக தோல், எலும்பு முதலிய தாதுக்களால் உண்டாகிய உருவம். சிவபெருமானுடைய உருவம் ஆன்மாக்கள் செய்யும் தியானம் ,பூசை முதலியன வைகளின் பொருட்டு சிவசக்தியாகிய திருவருட் குணங்கள்இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும் உருவம்.

16. சிவபெருமான் ஐந்தொழிலும் தாமே செய்வாரா?
சுத்தமாயையிற் கிருத்தியம் ஐந்தும் தாமே செய்வார். அசுத்தமாயையிற் கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுரரை அதிட்டித்து நின்று செய்வார். பிரகிருதியின்கீழுள்ள கிருத்தியம் ஐந்தும் அவ்வனந்தேசுரர் வாயிலாக ஸ்ரீகண்டருத்திரரை அதிட்டித்து நின்று செய்வார். ஸ்ரீகண்டருத்திரர் பிரம்மாவை அதிட்டித்து நின்று படைத்தலும், விஷ்ணுவை அதிட்டித்து நின்று காத்தலும், காலருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தலும் செய்வார். (அதிட்டித்தல் -நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்.)

17. ஸ்ரீகண்டருத்திரர் இன்னும் எப்படிப்பட்டவர்?
சைவாகமங்களை அறிவிக்கும் ஆசாரியார், பிரமா விஷ்ணு முதலிய தேவர்களுக்கும், இருஷிகளுக்கும் அறுபத்துமூவர் முதலாயினோர்களுக்கும் நிக்கிரகஅனுக்கிரகங்களைச் செய்யும் கருத்தா. சைவசமய தீட்சைபெற்றுச் சைவத்திற்புகுந்தவர்கள் வழிபடும் மூர்த்தி.

18. பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகாகேசுரன், சதாசிவன் என்னும் ஐவருடைய சக்திகளுக்கும் பெயர் என்ன?
பிரமாவினுடைய சக்தி சரஸ்வதி, விஷ்ணுவுடைய சக்தி இலக்குமி, உருத்திரனுடைய சக்தி உமை, மகேசுரனுடைய சக்தி மகேசுவரி, சதாசிவனுடைய சக்தி மனோன்மணி.

19. ஆன்மாக்களாளே பூசித்து வழிபடப்படும் சதாசிவவடிவம் யாது?
பீடமும் இலிங்கமுமாகிய கன்ம சாதாக்கிய வடிவமாம், பீடம் சிவசக்தி, இலிங்கம் சிவம்.

20. இலிங்கம் என்பதற்கு பொருள் என்ன?
படைத்தல் காத்தல் முதலியவைகளால் உலகத்தைச் சித்தரிப்பது.
(லிங்க -சித்தரித்தல்)

21. மகேசுரவடிவம் எத்தனை?
சந்திரசேகரர்,உமாமகேசர்,இடபாருடர்,சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர்,காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீஸ்வரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர்,சமுகாநுக்கிரகர் சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசீனர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், என்னும் இருபந்தைந்தும்

22. சிவபெருமான் ஆன்மான்களுக்காக அருளிச்செய்த முதல்நூல்கள் எவை?
வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம்.

23. வேதசிவாகமங்களில் விதிக்கப்பட்டவை யாது? புண்ணியங்கள்

24. புண்ணியங்களாவன யாவை?
கடவுளை வழிபடுதல், தாய் தகப்பன் உபாத்தியாயர் குரு முதலான பெரியார்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல், உண்மை பேசுதல், செய்நன்றியறிதல் முதலானவை.

25. புண்ணியங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?
மேலுலங்களாகிய புண்ணியலோகங்களிலே போய் இன்பத்தை அனுபவிப்பர்.

26. வேதசிவாகமங்களில் விலக்கப்பட்டவை யாவை? பாவங்கள்

27. பாவங்களாவன யாவை?
கொலை, களவு, மதுஅருந்துதல், மாமிசம் புசித்தல், பொய்பேசுதல், விபசாரம், சூதாடுதல் முதலானவை.

28. பாவங்களைச் செய்தவர் எதனை அனுபவிப்பர்?
நரகங்களிலே விழுந்து துன்பத்தை அனுபவிப்பர்.

## ஆன்மா (பசு) இயல்

29. ஆன்மாக்களாவார் யாவர்?
நித்தியமாய், வியாபகமாய், அறிவுடையபொருளாய், பாசத்தையுடையோராய், சார்ந்ததன் வண்ணமாய், சரீரம் தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவராய், சிற்றறிவும் சிறுதொழிலும் உடையவராய் தமக்கு ஒரு தலைவனை உடையவராய் இருப்பவர்.
30. ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?
தூலசரீரம், சூக்குமசரீரம் என இரண்டு வகைப்படும்.
31. தூலசரீரமாவது யாது?
சாதி குலம் பிறப்பு முதலியவைகளால் அபிமானஞ் செய்தற்கு இடமாய் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பூதமும் கூடிப்பரிணமித்த உருவுடம்பு. (பரிணமித்தல்- உருத்தரித்தல்)
32. சூக்கும சரீரமாவது யாது?
சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் காரண தன்மாத்திரைகள் ஐந்தும், மனம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணம் மூன்றுமாகிய எட்டினாலும் ஆக்கப்பட்டு ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய் அவ்வான்மாக்கள் போகம் அனுபவித்தற்குக் கருவியாய் , ஆயுள், முடிவின் முன்னுடம்புவிட்டு மற்றோருடம்பு எடுத்தற்கு ஏதவாய் இருக்கும். அருவுடம்பு.
33. ஆன்மாக்கள் எப்படி பிறந்திறந்து உழலும் ?
நன்வினை தீவினை என்னும் இருவினைக்கீடாக நால்வகைத்தோற்றத்தையும் ஏழுவகைப்பிறப்பையும் எண்பத்துநான்கு நூறாயிரயோனி பேதத்தையும் உடைய வர்களாகப்பிறந்து இறந்து உழலும்.
34. நால்வகைத்தோற்றங்களாவன யாவை?
அண்டசம் (முட்டையில் தோன்றுவன), சுவேதசம் (வேர்வையில் தோன்றுவன) உற்பிச்சம் (வித்து, வேர், கிழங்கு) முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம் (கருப்பையில் தோன்றுவன.
35. ஏழுவகைப்பிறப்புக்களாவன யாவை?
தேவர், மனிதர், விலங்கு. பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்
36. எண்பத்தினான்கு நூறாயிரம் யோனி பேதங்கள் எவை?
ஊர்வன பதினொன்றாம் ஒன்பது மானுடம்
நீர் பறவை நாற்கால் ஓர்பப் பத்து - சீரிய
பந்தமாந் தேவர் பதினான்கு அயன்படைத்த
அந்தமில் சீர்த்தாவரம்நா லைந்து
37. ஆன்மாக்கள் வினைகளைச் செய்வதற்கும், வினைப்பயன்களை அனுபவிப்பதற்கும் இடம் எவை?
இருவினைகளைச் செய்வதற்கும், இருவினைப்பயன்களை அனுபவிப்பதற்கும் இடம் பூமி நல்வினைப்பயனை அனுபவிப்பதற்கு இடம் சுவர்க்கம் முதலிய மேலுலகங்கள். தீவினைப்பயனை அனுபவிப்பதற்கு இடம் 28கோடி நரகங்கள்.
38. பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?
நல்வினை செய்த ஆன்மாக்கள் தூலதேகத்தை விட்டவுடனே சூக்குமசரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவசரீரத்தை எடுத்துக்கொண்டு சுவர்க்கத்திலே போய் அந்நல்வினைப்பயனாகிய இன்பத்தை அனுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள் தூலசரீரத்தை விட்டவுடனே சூக்குமசரீரத்தோடு பூதசார சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு நரகத்திலே அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அனுபவிக்கும். இப்படி அன்றி ஒரு தூலசரீரத்தை விட்டவுடனே தானேயொரு யோனி வாய்ப்பட்டு மற்றொரு தூலசரீரத்தை எடுப்பதும் உண்டு.

39. சுவர்க்கத்திலே இன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?
தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப்பூமியிலே வந்து மனிதர்களாய் பிறக்கும்.

40. நரகத்திலே துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?
தொலையாது எஞ்சிநின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப்பூமியிலே வந்து தாவரங்களாய் நீர் வாழ்வனவாய், விலங்குகளாய் பிறந்து முன்செய்த நல்வினை பொருந்த மனிதர்களாய் பிறக்கும்.

41. ஏழுவகைப்பிறப்பினுள்ளும் எந்தப்பிறப்பு அருமையுடையது?
பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெறுவதற்குகருவியாதலால் மனிதப்பிறப்பே மிக அருமையுடையது.

42. மனிதப்பிறப்பை எடுத்த ஆன்மாக்களுக்கு எப்பொழுது முத்தி சித்திக்கும்?
அவர்கள் தங்கள் பங்குவத்திற்கு ஏற்ற படிமுறையினாலே பிறவிதோறும் பௌத்தம் முதலிய புறச்சமயங்களில் ஏறிஏறி அவ்வச்சமயத்திற்குரிய பதியநூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள் பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே சைவசமயத்தை அடைவார்கள். சைவசமயத்தை அடைந்து சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை, கிரியை, யோகங்களை விதிப்படி மெய்யன்போடு அனுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞானசாரியரை அதிட்டித்து வந்து சிவானம் வாயிலாக உண்மை முத்தியை கொடுத்தருளுவர்.

43. புறச்சமயங்களின் வழியே ஒழுகுபவர்க்கு யாவர் பலன் கொடுப்பார்?
புறச்சமயிகளுக்கு அவ்வவரால் உத்தேசித்து வழிபடப்படும் தெய்வத்தைச் சிவபெருமானே தமது சக்தியினாலே அதிட்டித்து நின்று அவ்வவ்வழிபாடு கண்டு பலன் கொடுப்பார்.

44. சரியையாவது யாது?
சிவாலயத்திற்கும் சிவனடியார்களுக்கும் தொண்டு செய்தல்

45. கிரியையாவது யாது?
சிவலிங்கப்பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல்

46. யோகமாவது யாது?
விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச் சிவத்தைத் தியானித்து பின்பு தியானிப்போனாகிய தானும் தியானமும் தோன்றாது தியானப்பொருளாகிய சிவமொன்றே விளங்கப் பெறுதல்

47. ஞானமாவது யாது?
பதி பசு பாசம் என்னம் முப்பொருள்களின் இலக்கணங்களை அறிவிக்கும் ஞானநூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடல்.

48. சரியை,கிரியை,யோகம்,ஞானம் என்னும் நான்கினாலும் அடையும் பலன்கள் எவை?
சரியையினால் அடையும் பலன் சிவசாலோக்கியம், கிரியையினால் அடையும் பலன் சிவசாமீப்பியம், யோகத்தினால் அடையும் பலன் சிவசாருப்பியமாம் இம் மூன்றும் பதமுத்தி ஞானத்தினால் அடையும் பலன் சிவசாயுச்சியமாகிய பரமுத்தி.

## பாசவியல்

49. பாசமாவன யாவை ? ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பவைகளாம். பந்தித்தல் - கட்டுதல்

50. பாசம் எத்தனை வகைப்படும்?
ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இவற்றோடு மாயேயம், திரோதாயி என இரண்டு கூட்டிப் பாசம் ஐந்து எனக்கொள்வதுமுண்டு.

51. ஆணவமாவது யாது?
செப்பிற்களிம்பு போல ஆன்மாக்களுடன் அநாதியே கலந்து நிற்பதாய், ஒன்றேயாய், ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாகி அவர்களுடைய அறிவையும் தொழிலையும் மறைத்து நின்று தத்தம் கால எல்லையிலே நீங்கும் அனேக சக்திகளை உடையதாய்ச் சடமாய் இருப்பது.

52. கன்மமாவன யாவை?
ஆன்மாக்கள் மனவாக்கு, காயம் என்ற மூன்றினாலே செய்த புண்ணிய பாவங்கள் இவை எடுத்த பிறப்பிலே செய்யப்பட்டபொழுது ஆகாமியம் என பெயர்பெறும். பிறவிதோறும் எப்படி ஈட்டப்பட்டுப் பக்குவப்படும் வரையும் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும் பொழுது சஞ்சிதம் எனப்பெயர்பெறும். இச்சஞ்சிதகன்மங்களுள்ளே பக்குவப்பட்டவை மேல் எடுக்கும் உடம்பையும் அது கொண்டு அனுபவிக்கப்படும் இன்பதுன்பங்களையும் தந்து பயன்படும் பொழுது பிராரத்தம் எனப்பெயர்பெறும்.

53. மாயை எத்தனை வகைப்படும்?
சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்று வகைப்படும். இவைகளுள்ளே சுத்தமாயை, அசுத்தமாயை இரண்டும் நித்தியம். பிரகிருதிமாயை அசுத்த மாயையில் நின்றும் தோன்றியதாதலால் அநித்தியம்.

54. சுத்தமாயை யாவது யாது?
நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், சடமாய்ச் சொல்வடிவமும் சுத்தமாகிய பொருள் வடிவமும் தோன்றுதற்கு முதற்காரணமாய், மயக்கம் செய்யாததாய் இருப்பது.

55. அசுத்தமாயை யாவது யாது?
நித்தியமாய், வியாபகமாய், அருவமாய், சடமாய் பிரளயகாலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய், ஆன்மாக்களுக்கும் சுத்தா சுத்தமும் அசுத்தமுமாகிய தனுகரண புவனபோகங்கள் தோன்றவதற்கு முதற்காரணமாய், மயக்கம் செய்வதாய் இருப்பது.

56. மாயேயமாவன யாவை?
மாயையால் ஆகிய தத்துவங்களும், அவைகளால் ஆகிய தனு கரண புவன போகங்களுமாம்.

57. திரோதாயியாவது யாது?
ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் தொழிற்படுத்தி பாகம் வருவிக்கும் சிவசக்தி. இது மலத்தைச் செலுத்துதலினாலே மலம் என உபசரிக்கப்பட்டது.

58. மாயா காரியமாகிய தனு கரண புவன போகங்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கொடுப்பது எதன் பொருட்டு?
ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவமலமும் கன்மமலமும் ஆகிய நோய்களைத் தீர்த்துச் சிவானந்தப்பெரும்பேற்றைக் கொடுக்கும் பொருட்டு.

59. தனு கரணம் முதலியவைகளும் மலமன்றோ? மலம் என்பது அழுக்கன்றோ? ஆணவமாகிய அழுக்கை மாயாமலமாகிய அழுக்கினாலே எப்படிப்போக்கலாம்?
வண்ணான் கோடிப்புடைவையிலே சாணியையும் உவர்மண்ணையும் பிசறி மிகக்கறுத்ததென்னும்படி செய்த முன்னையதாகிய அழுக்கோடு பின்னயதாகிய அழுக்கையும் போக்கி அப்புடைவையை மிகவெண்மையுடையதாகச் செய்யவான். அதுபோலவே சிவபெருமான் ஆன்மாவிடத்தே மாயாமலத்தைக்கூட்டி அநாதிபந்தமாகிய ஆணவமலத்தோடு ஆதிபந்தமாகிய மாயாமலத்தையும் போக்கி அவ்வான்மாவைச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வுடையதாகச் செய்வார்.

திருச்சிற்றம்பலம்

# அமரர் அற்புதமலரின் வரலாற்றுச் சுருக்கம்

தந்தையார் :- தாமோதரம்பிள்ளை கந்தையா
தாயார் :- கந்தையா சின்னம்மா
பிறந்த திகதியும் இடமும் :- 16.09.32 - சிங்கப்பூர்
உடன்பிறந்தார் :- எதிர்மன்னசிங்கம், இராசேஸ்வரி,
கிருஷ்ணமூர்த்தி, இராசமலர்
கல்விகற்ற இடங்கள் :- பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி
திருமணம் :- 30.08.1950
மாமன் மாமி :- பேரம்பலம் அப்பாப்பிள்ளை - செல்லம்மா
கணவர் :- அப்பாப்பிள்ளை ஆறுமுகம்

## மகப்பேறு

| | |
|---|---|
| 1. விவேகானந்தன் | 24.10.1951 |
| 2. அமரர் சிவமலர் | 10.04.1953 |
| 3. சிவானந்தன் | 28.06.1954 |
| 4. அமரர் தயானந்தன் | 01.01.1956 |
| 5. முருகானந்தன் | 04.07.1957 |
| 6. வசந்தமலர் | 11.10.1958 |
| 7. மங்கையர்க்கரசி | 20.12.1965 |
| 8. திலகவதியார் | 09.05.1967 |

## மக்கள் திருமணம்

| | | |
|---|---|---|
| 1. விவேகானந்தன் | + பாலராணி | 1976 |
| 2. சிவானந்தன் | + மகாராணி | 1982 |
| 3. முருகானந்தன் | + குணலட்சுமி | 1994 |
| 4. வசந்தமலர் | + துரைலிங்கம் | 1981 |
| 5. முங்கையர்க்கரசி | + கணபதிப்பிள்ளை | 1992 |
| 6. திலகவதியார் | + செந்தில்நடராசா | 1993 |

## பேரப்பிள்ளைகள்

1. சுதர்சன், சுகன்யா + சடாட்சரா, இராகுலன்
2. சோபிகா, கிரிசான்,
3. ஆதீபன், பார்த்தீபன், ஜெயதீபன்
4. அருள்லிங்கம், தாரணி, தயாலிங்கம், சுகந்தலிங்கம்
5. ரோசிகா, சயந்தன், கபிலன்
6. ஜனனி, கம்சவாகினி, தர்சிகா

## மைத்துனர்கள் - கணவன் வழியாக

| | | |
|---|---|---|
| 1. இராசம்மா | + | நாகலிங்கம் |
| 2. பொன்னம்மா | + | சுப்பிரமணியம் |
| 3. இராமசாமி | + | பொன்னம்மா |
| 4. மனோன்மணி | + | பாலசுப்பிரமணியம் |
| 5. பொன்னம்பலம் | + | திரவியம் |

## உடன்பிறந்தார் வழியாக மைத்துனர், பெறாமக்கள்

| | |
|---|---|
| சரசுவதி . எ | - சிவனேசன்,சிவபாலன், சிவராசன், நிர்மலா, சிவலிங்கம் |
| சிவப்பிரகாசம். இ | - சிவனேஸ்வரி, மாலதி, இராசபுஷ்பம், மோகனராசா, கோபாலராசா, அனந்தி, வசந்தி, சத்தியராசா |
| புவனேஸ்வரி. கி | - காண்டீபன், முகுந்தன், கௌரி |
| பத்மநாதன். இ. | - பிரபாகரன், பிரியா, சுதாகரன், சத்தியபாமா |

## பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

| | | | |
|---|---|---|---|
| நிர்மலாதேவி | + | முத்துலிங்கம் | பாபுஜி, சங்கீதா, சஞ்ஜீவன் |
| லோகேஸ்வரிதேவி | + | குகதாசன் | அபிராமி, சாரங்கன், |
| ஜெயதேவி | + | சிவனேசன் | அலென்சி |
| சிவனேஸ்வரி | + | ஜெயபாலா | மதனி, இரஜனி, சாலினி |
| மாலதி | + | யோகராசா | |
| இராசபுஷ்பம் | + | செல்வராசா | திவ்வியா, நிமாசினி, சிவாசினி |
| மோகனராசா | + | பபீந்திரா | |
| கோபாலராசா | + | கார்த்தியாயினி | ஷகிலன், |
| வசந்தி | + | இராஜ்குமார் | |
| அனந்தி | + | பரஞ்சோதிநாதன் | |

## மருமக்கள் , பேரப்பிள்ளைகள்

| | | |
|---|---|---|
| நா. நாகராசா | + மீனாம்பாள் | மகேஸ்வரி, யோகேஸ்வரி |
| நா. நாகேஸ்வரி | + கந்தசாமி | புஷ்பராணி, அருட்செல்வம் |
| நா. சிவபாக்கியம் | + செல்லையா | சாந்தி, வசந்தி |
| இராசலிங்கம் | + செல்வி | |
| வரதராசா | + ஆனந்தமலர் | |
| இராசமலர் | + | |
| செல்வராசா | + சூர்யா | |
| காந்தரூபன் | + பிரேமா, காந்தரூபி, சிவரூபன், கலாரூபி,கணேசரூபன் | |
| மோகனரூபன் | + ரஜினி | |
| சாந்தாதேவி | + சிவநாதன், ஜீவனேஷ்,தனீசா,வினோசா | |
| மனோகரன் | + அகிலாண்டேஸ்வரி - மயூரி, ரோசா | |

## தந்தையார் வழி சிறியதந்தைமார், மாமியர்

| | | | |
|---|---|---|---|
| தா. ஆறுமுகம் | + | தங்கம்மா | - மீனாம்பாள், இராமமூர்த்தி,மீனாம்பிகை, தனலட்சமி, பாக்கியம்,தட்சணாமூர்த்தி |
| தா. நாகலிங்கம் | + | சிவபாக்கியம் | - அருளானந்தம், சத்தியேஸ்வரி, புவனேஸ்வரி + குமாரசாமி |
| அன்னப்பிள்ளை | + | இராமலிங்கம் | - சிவபாக்கியநாதன் + திலகவதியார், அமிர்தலிங்கம் + சிவசக்தி, புவனேஸ்வரி + கிருஷ்ணமூர்த்தி |
| செல்லாச்சி | + | பொன்னம்பலம் | - நல்லமுத்து, நன்னித்தம்பி, அன்னம்மா +தர்மலிங்கம், மதியாபரணம், கமலாதேவி,துரைலிங்கம்,அமுதலிங்கம், செல்வமலர், முத்துலிங்கம் |

மாமன்மார்

| | |
|---|---|
| கந்தையா + | தெய்வானைப்பிள்ளை - அமுதசிங்கம் + இராணி |
| | பேரின்பம் + யோகமலர் - இன்பராசா |
| | ஞானசிரோமணி + சிவப்பிரகாசம் |
| மாதவர் + | இராசமலர் - ஜெயபாலா |
| சுப்பிரமணியம் + | பொன்னம்மா - காந்தரூபன், மோகனரூபன், காந்தாதேவி |

## பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்

கேதீஸ்வரன் + ஜெயந்தி
சர்வேஸ்வரன் + வசந்தகுமாரி - சுரேஸ், சுரேன்
நடேஸ்வரன் + சியாமளா
சகுந்தலாதேவி+ சிவபரன் - சிந்துவர்மன்
செல்வரூபி + பர்ஸான் - பாவிகா
சத்தியபாமா
பிரபாகரன்
பிரியா
சுதாகரன்

பெற்றாருடன் வாழ்ந்த காலத்திலும், கணவருடன் குடும்பத்தில் துணையாயிருந்த காலத்திலும் செல்வவாழ்வு, சுகதேகம் உடையவராய் நிறைவாழ்வு வாழ்ந்தார். சென்ற 31.01.01இல் நெஞ்சுக்குத்து உண்டாயிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கூட்டிச்செல்லப்பட்டார். ஆங்கு அவசர சிகிச்சைப்பிரிவில் படுத்திருந்தவேளையில் சில நிமிசங்களால் உடலைத் துறந்து சிவபதம் எய்தினார்.

## எங்கள் அருமையான தெய்வத்தாய்

பத்துமாதம் சுமந்து இப்பாரில் எம்மைப்பெற்றெடுத்த அன்புத்தெய்வம் எங்கள் அம்மா இன்று இல்லையே என்பதை எண்ணும் பொழுது நெஞ்சம உருகுகின்றது.எங்கள் அம்மா மக்களைப்பெற்ற மகராசி. "தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லைத் தந்தைசொல் மிக்கதோர் மந்திரமில்லை" என்னும் வாசகத்தின் அர்த்தத்தைப் புரியவைத்து. ஐவயகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் எங்கள் அம்மா. அறிவும், ஒழுக்கமும், பண்பும், அன்பும் நிறைந்த எங்கள் அருமை ஐயாவின் வாழ்க்கைத்துணைவியாகி எங்கள் குடும்பத்தைக் கட்டியெழுப்பியவர். அம்மாவின் குரலே இனிமை கலந்த ரீங்காரமானது. அவர் உள்ளம் அன்புநிறைந்தது. தாம்பிறந்த வீட்டிலும், புகுந்தவீட்டிலும் அன்புததும்பிய வாழ்க்கையே வாழ்ந்திருக்கின்றார். நாம் கல்வியிலும், செல்வத்திலும், குடும்பவாழ்க்கையிலும் மேன்மையுற்று விளங்கவேண்டுமென அயராதுபாடுபட்டவர். எங்கள் அம்மா பெற்றெடுத்த பிள்ளைகள் யாவரும் நன்றாக வளமாக வாழுகின்றோம். நமது பெற்றோரிடம் நாம் பிறப்பதற்குக் கோடிபுண்ணியம் செய்துள்ளோம்.

பொருள் தேடுவதிலும் அதனைப் பேணுவதிலும் அக்கறையுள்ள எங்கள் அம்மா பிறருக்கு உதவுவதிலும் இன்பம் கண்டவர். உறவினர், அயலவர், ஊரவர், நண்பர்கள், அன்பர்கள் யாவருடனும் அன்பாகப்பழகுவார். எங்கள் வீட்டுக்கதவு அடையா நெடுங்கதவு. யாருமற்றவர்கள் வந்து ஆறிமனந்தேறிப்போகும் நல்லதொரு தர்மமனை. எல்லோருடனும் இதமாகப்பேசி அவர்கள் வேண்டும் உதவிகளை இயன்றளவு செய்து வாழ்ந்த பெருமை எங்கள் அம்மாவுக்கு உண்டு. பார்வையிலும் வாழ்விலும் எல்லா நிறைவுகளும் பெற்ற மகாலட்சுமி அவர். ஒவ்வொரு மனிதனும் அன்புள்ளவனாக இருக்க வேண்டுமென்பதே தமிழ்கூறும் தத்துவம். எட்டுப்பிள்ளைகளைப் பெற்றெடுத்த எங்கள் அன்னைக்கு எவ்வித குறைவுமில்லை.உற்றார் உறவினர் ஊர்மக்கள் அன்பர்களுடன் அன்பாகப்பழகினார் என்பதைஅவர் பிரிவின் பொழுது அவர்கள் சிந்திய கண்ணீரே நிருபித்தது.

எங்களைப் பெற்றதெய்வம் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவே இருப்பா. மிகநெருங்கியவர்களுடன் சில வேளைகளிற் கோபப்படுவதுண்டு. அதுவும் சிலநொடிகளில் மாறிவிடும். மீண்டும் அன்புமழையைப் பொழிவார். எங்கள் அம்மா வாழ்க்கைப்பட்ட இடம் வசதியானது. அதனால் அவருக்கு எவ்வித பொருட்பஞ்சமும் இருந்ததில்லை. விருந்தோம்பும் சிறந்தகுணம் அம்மாவுக்கு இறைவனாற் கொடுக்கப்பட்டது. யார் வந்தாலும் தேநீர் கொடுக்கத்தவறமாட்டார். கதவைத் திறந்து எட்டிப்பார்த்து ஆளில்லை எனக்கூறிக் கதவை மூடிவிடும் பெண்களின் வரிசையில் எங்கள் அம்மா இல்லை. வாருங்கள் இருங்கள் என இனிமையாக உபசரித்து வழியனுப்பும் பண்புள்ளவர். எங்கள் தாய். எங்கள் அருமைப்பெற்றோர் தங்கள் சுயநலத்துக்காக எங்களைப்பலியாக்கவில்லை. எங்கிருந்தாலும் நன்றாக வாழ்க என ஆசீர்வதித்து நாம் நலமும் வளமும் பெற்று வாழ்வதில் இன்பம்கண்டவர்கள் அவர்கள். அவர்களின் உதிரத்திலே தோன்றி அன்னையின் உதரத்தை வீடாகக் கொண்டு உருவாகிய நாம் அவர்களுக்குப் பிற்காலத்தில் அருகிலிருந்து சேவைசெய்ய முடியவில்லையே என்பதுதான் எங்கள் ஏக்கம். எங்கள் துயரம் எல்லோருக்கும் சந்தர்ப்பம் அமையாவிட்டாலும் எனக்காவது இறுதிக்கிரியைகள் செய்ய வாய்ப்புக்கிடைத்ததே நாமெல்லோரும் செய்த பெரும் புண்ணியம் அது.

கணவர், பெற்றபிள்ளைகள், பெற்றோர், சகோதரர், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர், மைத்துனிமார், மாமன்மாமி அனைவருடனும் அன்பாகப்பழகிப் பாசத்தைச் சொரிந்தவர் எங்கள் ஐயாவின் இலட்சிய வாழ்வுக்கு உறுதுணையாக விளங்கியவர். வாழ்விலும் மரணத்திலும் பெருமைதேடிக்கொண்டவர். மங்கல மனையாளாக வாழ்ந்து மரணித்த தெய்வத்தாய் அவர். பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனிசிறந்தனவே என்னும் பாரதியின் பாட்டை ஏட்டிற் படித்தோம். நான் இன்று எண்ணி எண்ணி உருகுகின்றேன். அந்நியதேசத்தில் வாழும் நாம் அன்னையின் தந்தையின் நாட்டின் பாசத்தை நேசத்தை எண்ணிக்கலங்குகின்றோம். இதனை எழுத்தில் வடிக்கமுடியாது. இதயத்திற்றான் சுமந்து தவிக்கமுடியும்.

கடந்தவருடம் எனது மனைவியும் நானும் இந்தநாட்டுக்கு வந்து எங்கள் அம்மா ஐயாவுடன் தங்கி வாழ்ந்து, நமது ஆசைக்கனவுகளை ஓரளவு தீர்த்துக்கொண்டோம். மீண்டும் மீண்டும் வந்து அவர்களைப் பார்க்க, அவர்களுடன் தங்கி வாழ்ந்து உண்டு உறங்கி அளவளாவ ஆசை கொண்டோம். விதிவேறாகி விட்டது. நினைப்பதெல்லாம் நடத்துவிட்டால் என்ன குறை. எங்கள் அன்புத்தெய்வம் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்டார். அவர் ஆத்மா விசவத்தனை முருகப்பெருமானின் பாதாரவிந்தங்களை அடையப்பிள்ளைகள் நாம் யாவரும் பிரார்த்திப்போம்.

மூத்தமகன்
ஆ. விவேகானந்தன்

## பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்துபெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச்... செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி.

நொந்து சுமந்துபெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாளாமே - அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாயார்க்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்தே
அந்திபக லாய்ச்சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்.

அரிசியோ நானிடுவேன் ஆத்தான் தனக்கு
வரிசையிட்டும் பார்த்து மகிழாமல் - உருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியபூ
மானே எனவழைத்த வாய்க்கு.

அள்ளி யிடுவ தரிசியோ தாய்தலைமேற்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் - மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி யென்றன்
மகனே எனவழைத்த வாய்க்கு.

முன்னை யிட்டதீ முப்புரத்திலே
பின்னை யிட்டதீ தென்னிலங்கையில்
அன்னை யிட்டதீ அடிவயிற்றிலே
யானும் இட்டதீ மூள்கமூள்கவே

அன்னையைப் போலொரு தெய்வம் - இந்த
அவனியில் எங்கேனு முண்டோ?
மாதா பிதாகுரு தெய்வம் - அவர்
மலரடி நிதம் நிதம் வணங்குதல் செய்வம்.

- கண்ணதாசன்-

## அன்புக்கோர் அரசி

செந்தமிழும் சிவநெறியும் காக்கும் நல்ல செந்தண்மை பூண்டவராம் எங்கள் ஆசான் சிந்தை மகிழ் நல்லறமாம் இல்லறத்தை சீருடனே நடத்திடவோர் துணைவியானார் முந்தையரின் வழியினிலே அறத்தைக்காத்து முழுமனதாய் இறையருளை நாடிநின்றார். கந்தையா சின்னம்மா மகளாம் எங்கள் கனிவுமிகும் அற்புதமலராம் அன்னை.

இல்லறத்தின் ஆணிவேர் அன்பு என்றே இதயத்தில் எந்நாளும் கொண்டு நின்றார். நல்ல மனம் படைத்ததினால் நிறைந்த வாழ்வை நானிலத்தில் பெற்றிட்டார் என்றே சொல்வோம். வல்லவராம் மக்களினைப் பெற்றும் நல்ல வளமிகுந்த வாழ்வினே ஓங்கி நின்றார். செல்வமெலாம் நிறைந்திட்ட வாழ்வைப்பெற்று சீருடனே பல்லாண்டு வாழ்ந்தார் கண்டோம்.

இல்லறத்தின் அரசி என என்றும் வாழ்ந்தார். இல்லத்தே வந்தோரை அருமையாக நல்வார்த்தை பலகூறி உபசரித்தார். நாயகனின் குறிப்பறிந்து நடந்துகொண்டார். எல்லோரும் போற்றிடவே வாழ்ந்து வந்தார். இறையவனின் அருளுக்கும் உரியவரானார். நில்லாத உலகத்தின் இயல்பை எண்ணி நித்தியராம் இறைவனடி நண்ணினாரே.

சொல்வேந்தன் பண்டிதர். ப. இராசகுரு.

உ
சிவமயம்

## " எங்கள் குருபத்தினியின் ஆத்மா சாந்தியடைக."

குலம், அருள், தெய்வக்கொள்கை, மேன்மை, கலைபயில் தெளிவு, கட்டுரை வன்மை என்பன நிறைந்து, நிலம், மலை, நிறைகோல், மலர் என்பனவற்றிலுள்ள மாட்சிமைக்குணங்களை உடையவனாக இருக்கும் ஒருவனே உண்மையான ஆசிரியனாக இருப்பான் என தமிழ் இலக்கணநூல் எடுத்துரைக்கின்றது. இவற்றுக்கு இலக்கணமாயிருந்து இவற்றைக்கற்பித்த எங்கள் குருமணி அருட்புலவர், புலவர் மணி பண்டிதர் திரு.அ. ஆறுமுகம் அவர்கள் எனது ஞானத்தந்தை. அவரது அருமைத் துணைவியார் அமரத்துவம் அடைந்த அற்புதமலரக்கா எங்கள் குருபத்தினி. அவரது பிள்ளைகள் எனது அன்புச்சகோதரர்கள். அவரின் உடன்பிறப்புக்கள் எனது நெருங்கிய உறவினர்கள். இதுததகையதொரு நெருக்கமான தொடர்புடன் நான் எனது ஆசிரியர் வீட்டுக்குக் கடந்த ஐம்பது வருடகாலமாக சென்று உறவாடிவருகின்றேன். எங்கள் குருபத்தினி அற்புதமலரக்கா மிக்கஅன்புள்ளம் கொண்டவர். தமது கணவரது கொள்கைகளுக்கு ஏற்பத் தாமும் பண்புள்ளவராக விருந்தோம்பல் நிறைந்தவராக சிறந்தவொரு இல்லக்கிழத்தியாக வாழ்ந்தவர். எங்கள் பண்டிதர் அவர்களைத்தேடிச் செல்வோர் யாராக இருந்தாலும் அவர்களை முகமலர்ச்சியோடு உபசரித்து தாகசாந்தி செய்யப்பண்ணியே அனுப்புவார். அவர்களது இல்லத்தில் எத்தனை தமிழ்ச்சங்கக் கூட்டங்கள் நடத்தினோம். கணவரின் குறிப்பறிந்து நம்மை உபசரித்து அனுப்பும் செம்மணச்செல்வி அவர். பெரியபட்டப்படிப்புகள் பெற்றாலே தான் பண்பும் அறிவும் வளருமென போலியான நினைவு சிலருக்கு உண்டு. அற்புதமலரக்கா படித்தவர். தனது குடும்பத்தை நிர்வகித்து கணவனுக்கு உற்றதுணையாக இருந்து தன்மக்களை மேல்நிலைக்குக் கொண்டுவரும் திறன்படைத்தவர் தையல்கலையில் சிறப்பு உடையவர். ஒரு இல்லக்கிழத்திக்குத் தேவையான தகுதிகளை உடையவர். சராசரி பெண்களைவிட சற்றே விரிவடைந்த மனஇயல்புடையவர். "தற்காத்துக் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற சொற்காத்துச் சோர்வில்லாத" பெண் அவர் நா போகும் வேளையில் பண்டிதர் அவர்கள் வீட்டில் இல்லாதிருப்பினும் நான் சலிப்படைவதில்லை. காரணம் அற்புதமலரக்கா வஞ்சனையின்றி உளம்திறந்து மகிழ்ச்சியோடு என்னுடன் உரையாடுவார். எங்கள் குடும்பத்துடனும் மிக்க அன்பு கொண்டவர். எங்கள் மகளுக்கு நல்லதொரு கணவன் கிடைக்கவேண்டுமென முயன்று அதில் வெற்றியும் கண்டவர். எங்கள் ஆசிரியரின் வீட்டுக்கு மூத்தமருமகளாக வந்தவர். மகாலட்சுமி போன்றவர். அவரில்லாத அந்தவீட்டைப் பார்க்கும் பொழுது நான் மிகவும் வேதனை அடைகின்றேன்.

அமரர் அவர்களுக்குச் சம்பவித்த மரணம் பெருமைப்படக்கூடியது. முரண வீட்டில் கண்ணீர் விடாதவர்களையே நான் பார்க்கவில்லை. "பேருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்" நல்லதொரு குடும்பப்பெண்ணாக இருந்து அன்பெனும் விதையை விதைத்த வாழ்ந்தவர் அவர். அதனாலேயே எல்லோரும் கண்ணீர் சொரிந்தனர். இளமையிலும் இல்லறவாழ்விலும், பிற்காலத்திலும் அவர் செல்வமாகவே வாழ்ந்தார். நல்ல பெற்றோர், அருமைச்சகோதரர், தெய்வக்கணவர், இனிய மக்கட் செல்வங்கள், அன்புமருமக்கள், பேரப்பிள்ளைகள், ஒற்றுமையான மைத்துனர் மைத்துனிமார், பொருளீட்டிக்கொடுத்த மாமன் மாமி இத்தனையும் அவருக்கு கிடைத்தன. வேறென்ன வேண்டும்? தள்ளாமையை அனுபவிக்காது பதத்தோடும் பக்குவத்தோடும் பூவோடும் பொட்டோடும் மரணித்த எங்கள் குருபத்தினியின் ஆத்மா சாந்தியடையவேண்டும். விசவத்தனை முருகப்பெருமானது பாதாரவிந்தங்களை அடையவேண்டும். அவர் பிறவாத இன்பப் பேற்றினை பெறவேண்டும். இதுவே என் பிரார்த்தனை.

ஓம் சாந்தி

பண்டிதை பொன். புாக்கியம்
சுழிபுரம்.

உ

# அன்புக்கினிய அற்புதமே

மற்றவரின் மனம்நோகப் பேசியறியாத மானுடம் பேணும் தன்மையுடைய அற்புதகுணம் படைத்தவர் அமரர் திருமதி அற்புதமலர் ஆறுமுகம். அன்புமிக உடையவர்கள் மேலோர் என்பது பாரதியின் வாக்கு. அற்புதமான அன்பைத் தன் பண்பாகக் கொண்டவர் அமரர். நட்பு, தயை, கொடை இவருடன் கூடப்பிறந்தவை.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பார்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்ற பொய்யா மொழிக்கு இலக்கணம் அற்புதமலர் என்றால் மிகையில்லை. வசீகரமான புன்னகையைச் சிந்திக் கொண்டிருக்கும். அவர் முகம் அற்புதம். அற்புதமான குணம் படைத்த மக்கட் செல்வங்களைப் பெற்றெடுத்த அம்மையார் மகராசி அவரிடம் செல்பவர்கள் ஒருபோதும் விருந்தயராது சென்றிலர். விருந்தோம்பும் மேலான அறம் அவரின் கைவந்த கலை. செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்கல் என்றவாக்கு அம்மையாரின் வாழ்வானதை யாரும் மறுக்கமுடியாது. மோத்தத்தில் இனிமையும் எளிமையும், அன்பும்,இரக்கசிந்தையும், தெய்வநம்பிக்கையும் பண்பும் கொண்ட பண்பாளரே அமரர்.

பண்டிதர் ஆறுமுகனாருக்குப் புண்ணிய வசத்தாற் கிடைத்த மனையாள் அற்புதமலர். பார்வதியும் பரமேஸ்வரனும் போன்று, அறம்காத்து, மறம் கடிந்து வாழ்ந்த இக்குடும்பம் தெய்வீகமானது. இல்லறவாழ்வின் இலட்சியத்திற்கு இவர்கள் எடுத்துக்காட்டுகள்.

திருமதி. நா. செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர்
இந்துநாகரீகம்
தலைவர். நுண்கலை
யாழ் பல்கலைக்கழகம்.

## வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்கத்தார் வழங்கிய அஞ்சலி உரை

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்கம் அண்ணளவாக 40 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப்பட்டது. பெரும் பிரிவுற்ற புலவர் நா. சிவபாதசுந்தரனார், பண்டிதர் அ. ஆறுமுகனார், பண்டிதர். கா. மயில்வாகனனார் ஆகிய மூவரும் வித்திட்ட எமது சங்கம் இன்று ஓங்கி வளர்ந்து உயர்ந்து சித்தன்கேணி அம்பலவாணநாவலர் வளாகத்தினர் நாவலர் மரபுவழி நன்கொடையால் அலுவலகம், வகுப்பறை முதலியவற்றைக் கொண்டு விளங்குகின்றது. தமிழ்ப்பணி புரிகின்றது.

பண்டித புலவர் வித்துவான்களை உறுப்பினர்களாகக் கொண்ட இச்சங்கம் தொடக்ககாலம் முதல் பல்லாண்டுகளாக பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் வகுப்புக்களையும் அலுவல்களையும் நடாத்தி வந்தது.

நிறுவுனர்களில் பண்டிதர் ஆறுமுகனாரின் பணிமகத்தானது. அவருடைய இல்லத்திலே அடிக்கடி ஆசிரியப்பெருமக்கள் கூடுவர். மேலே நடக்கவேண்டிய பணிகளை ஆராய்வர்கள். ஆட்சிமன்றக்கூட்டங்கள் கூட அவரது இல்லத்தில் நடத்தப்படுவதும் உண்டு.

பண்டிதர் அவர்களின் பாரியார் அற்புதமலர் அன்னையார் சங்கப்பணிகளுக்கு பெரும் சேவை புரிவார். தமிழ்பணியில் ஆர்வங்கொண்ட அம்மையார் சங்க நிருவாகிகளைப் புன்முறுவலுடன் வரவேற்பார். இனிய இனிய சிற்றுண்டிகளையும் குளிர்பானங்களையும் வாரிவாரி வழங்குவார். சோர்வடையமாட்டார். தனது நாயகனின் பணிகளுக்கு முன்னின்று உதவுவார்.

அவருடைய பெரும் பிரிவு குடும்பத்தினருக்கன்றி தமிழ்ச்சங்கத்திற்கும் அளப்பரிய இழப்பாகும். அவரது ஆத்மா சாந்தியடைய வேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொள்கின்றோம். பண்டிதர் அய்யாவினதும் குடும்பத்தினதும் ஆறாத்துயரினை பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

சுபம்
வணக்கம்
நன்றி

அன்புடன்
செயலாளர்
பண்டிதர். மு. சு. வேலாயுதபிள்ளை
அதிபர்
காரை. கலாநிதி. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்.
காரைநகர்.

உ

குஞ்சித சரணம் கூட்டுக என்று
கூத்தன் பாதம் ஏத்தித் தொழுவோம்

புலவர் மணி பண்டிதர் க. மயில்வாகனனார்

(ஆறுசீர்கழி நெடில் விருத்தம்)

கங்கையொடு மதிபுனைந்து தில்லையிலும் இதயத்தும் ஆடுங் கூத்தா!
துங்கமுறும் உழுவலன்பர் ஆறுமுகர் துணைவியராம் அற்பு தத்தார்,
எங்குலத்து நாணமொடு மடமச்சம் பயிர்ப்புடையார், உங்குற் றாரே!
அங்கெடுத்த பாதநிழல் இடம்தந்தே அருள் புரிவீர் அப்பா! போற்றி!!

என்றுமின்பம் பெருகிடவே ஐந்தொழிலை என்றென்றும் இயற்று ங்கூத்தா!
என்னுயிர்நேர் புலவர்மணி பண்டிதராம் ஆறுமுகர் இனிய, பாரி
துன்றுதெய்வந் தெளிந்து வந்து விருந்தோம்பும் தோகை நல்லார் உங்குப் போந்தார்
அன்னையவர்க் கெடுத்தபத நிழலளித்தே அருள்புரிதிர்! அரசே! போற்றி!!

மனறையோதீ, அழலாடி, மணிகண்டா! முன்றாடி! கைவை வாணா!
இறையேனும் எனை மறவாப் பேரன்பர்க் கினியதிரு மனையாய் நின்றார்
அறைபுகழார்; வறியோரை அணைத்தோம்பும் அற்புதமாம் அன்னை போந்தார்
இறையவனே! எடுத்தபத நிழலவர்க் கீந்தருளும் போற்றி! போற்றி

அரவசைத்துத் தோலுடுத்தே உடுக்கொலித்தும் அனலேந்தி ஆடும்கூத்தா!
மரபோம்பி இல்லறத்துத் துறவியென வாழ்ந்தவாறு முகனார் பன்னிபோந்தார்
உரனுடனே புதல்வர்களை ஈன்றருளி வாழ்வுதந்தார் ஊங்குப் — போர்ந்தார்
வரமருள்வீர் எடுத்தபத நிழல்தந்தே! பிஞ்ஞகனே! போற்றி! போற்றி

அன்புடையார் அருளூரடையார் அறமுடையார் அகமுவந்தே எவரும் போற்றி
இன்பினொடும் பண்பினொடும் வாழ்வாங்கு வாழ்ந்திங் கினிய செய்தார்
தன்பதியும் புதல்வரொடு புதல்வியரும் சுற்றமுளர் கலங்கப் போர்ந்தார்
என்னிறைவா! எடுத்தப்பதத்திவர்க்கிடம் தந்தருள்வாய! போற்றி! போற்றி

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உ
சிவமயம்

# மனமாண்புடைய மாதர் திலகம்

இயற்கை இயல்பினன், அவ்வியற்கையோடொன்றிய சுபாவமுடையோன், தூய உள்ளத்தினன், துலங்குமறிவு படைத்தோன், இனியர்க்கு துணையாகும் ஏந்தல், யாவரையும் அவரவர் தகுதிக்கேற்ப உயர்த்திப்பார்த்து மகிழும் உந்நதம் பொருந்தியவன். எவ்வெவ்வாறெல்லாம் ஏற்றிப் போற்றப்படுவாரே எங்கள் புலவர்மணி அ. ஆறுமுகம் அவர்கள். இவரது எல்லா உயர்வுக்கும் ஆதாரசுருதியாக, உந்து சக்தியாக விளங்கியவரே மனைமாட்சி மிக்க மங்கை நல்லாள் அற்புதமலர்.

"ஒற்றைக் குடும்பம் தன்னில் பொருளோங்க உழைப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே மனைவாழ்ந்திடச் செய்பவள் அன்னை"
என்பான் பாரதி

அதற்கொற்ப இம்மங்கை நல்லாள் இல்லறம் சிறக்க இனிது உழைத்தார். இம்மங்கை நல்லாளின் மனதுக்கேற்ற பிள்ளைகளும் வாய்ந்தன. பண்பாளராக உயர்ந்து சிறந்து விளங்குகின்றார்கள். நல்லமனைவிளக்கான இவர் இல்லறத்திற்கு சிறப்பை நல்கும் விருந்தோமபும் அறத்தை நன்கு பேணியவர். வீட்டிற்கு வரும் விருந்தினர் தன்மை அறிந்து "தலைநாள் விருப்புக்குன்றா வண்ணம் -----" உபசரிக்கும் உளப்பாங்கு பெற்று விளங்கினார். தலைவன் பெருமையே தன் பெருமை என்ற ஏமாப்போடு நின்றவர்.

"மானம் சேர்ப்பது மனைவியின் வார்த்தையடா" என்ற கூற்றினை மெய்ப்பித்தவர்

பழமையும் பெருமையும் உடைய தலைமைத் தமிழ்ச்சங்கமான ஆ.தி.பா.வி சங்கத்தினர் புலவர்மணி என்னும் விருதை நல்கிய போது புலவர் மணியின் மனைவியாரின் வார்த்தைகளுடாக மானம் என்பதன் ஆழப் பொருளுணர்ந்தேன். காதலன்புடைய இம்மாது நல்லாள், உலகவாழ்க்கையை விட்டதுங்கூட இயற்கை நியதியின் ஒருவகைப் பொருத்தப்பாடன்றோ.! ஆதலால் கழிவிரக்கம் வேண்டியதில்லை. என்னையெனின்

"உரிமை போக்கியல்லாற் தாம் போதலும் பொருதலும் இல்லை" யெனச் சீவகன் மயிற்பொறியில் மனைவியை விடுத்தானே.! பாதுகாப்பை நல்கும் தலைவனின் பண்பது.

புலவர்மணயின் உரிமைப்பெண்மணி இயற்கை எய்தினாள். இயற்கையில் இயல்புணர்ந்த புலவர்மணி கலங்காது மலங்காது காத்திரமாக இருப்பது பற்றுக்களைத் துறந்த பான்மையைக் காட்டுவதே இதுவே அப்பொருத்தப்பாடு

கலங்காமை நல்குவதே கல்வி நலம் என்பது, புலவர்மணியைப் பொறுத்தவரையில் உண்மையே.

## என்றும் வேண்டும் இன்ப அன்பு

பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன்,
செயலாளர்,
ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கம்,
யாழ்ப்பாணம்.

# நன்றி நவில்கின்றோம்



எங்கள் குடும்பத்தலைவி திருமதி அற்புதமலர் அம்மையார் மீளாத்துயிலில் ஆழ்ந்து சிவபதமடைந்த வேளையில் விரைந்து வந்து, செய்யவேண்டிய கருமங்களை ஒழுங்கு செய்த பேரன்பர்களுக்கு பெரிய நன்றி கூறுகின்றோம்.

வெளிநாட்டிலிருந்தும் மிகத்தூர இடங்களிலிருந்தும் அவசியமாக வந்து சேரவேண்டிய மக்கள், மருமக்கள், உறவினர்களை எதிர்பார்த்து ஐந்து நாட்களாக காத்திருந்தோம். தலைமகன் குடும்பத்துடன் வந்து சேர்ந்த அடுத்தநாள் 04.02.01 இல் இறுதிக்கிரியைகள் நடத்தினோம். எல்லா நாள்களிலும் வந்து அனுதாபம் தெரிவித்த அன்பர்களுக்கும் இறுதி நாளில் பெரும் திரளாக சமூகம் அளித்த அன்பர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

இறுதிக்கிரியைகள் நடத்தி குருமார்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளிப்படுத்தியும் இரங்கலுரைகள் நிகழ்த்தியும் மலர் மாலைகள் சூட்டியும் தங்கள் அன்பைப்புலப்படுத்திய நல்லோருக்கும் நன்றி கூறுகின்றோம். மயானத்துக்குத்திரளாக அணிவகுத்து வந்த அன்பர்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

தூர இடங்களில் இருந்து தந்திகள் தபால்கள் அனுப்பி அனுதாபம் தெரிவித்தோருக்கும் நன்றி கூறுகின்றோம். 31 நாள்களிலும் மூன்று வேளைகளிலும் சோறுகறி பலகாரங்கள் தாராளமாகக் கொண்டு வந்து உதவிய தாய்மார் உறவினர்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டுகின்றோம். இவையெல்லாம் அம்மா கொடுத்து வைத்த கடப்பாடுகள் என்று உணருகின்றோம்.

இன்று வெளியீடு செய்த அற்புத தரிசனத்தில் அம்மையாரின் வரலாற்றில் இடம்பெற்ற மருமக்கள், பேரப்பிள்ளைகள் முதலியோரின் பெயர்கள் சரிவரத்தெரியாமையால் இடம்பெறவில்லை. மன்னிக்கவும்

இன்று 04.03.01 இல் வீட்டுக்கிருத்திய நிகழ்வில் பங்குபற்றிய குருமார்கள், கூட்டுவழிபாடு செய்தோர், மதியஉணவில் பங்கு பற்றியோர், அற்புத தரிசனம் மலர உதவியோர் அனைவருக்கும் இவை அனைத்தும் சீராய் நிகழ எங்குமாய் எல்லாமாய் துணைபுரிந்த பகவானுக்கும் மனமார்ந்த நன்றி கூறுகின்றோம்.

**நன்றி.**

-குடும்பத்தினர்-

பண்ணாகம்
சுழிபுரம்.

*SAIRAM COMPUTER PRINT, CHANKANAI.*